**சார்பு நீதிமன்றம், திருவாரூர்.**

**அசல் வழக்கு எண்.89/2023**

**12.02.2025**

**வா.சா.1 மாலா, க/பெ. தியாகராஜன்**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தந்தையார் பெயர் பக்கிரிசாமி பத்தர், தாயார் பெயர் மாரிமுத்து அம்மாள். நான் 1964 ல் பிறந்தேன். தேதி, மாதம் தெரியாது. எனக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. செல்வசேகரன் மற்றும் ராஜசேகரன் அதில் ராஜசேகரன் மட்டும் இறந்துவிட்டார். சகோதரிகள் 4 பேர் கங்கா, சந்திரா, அமுதா, பாமா ஆகியோர்கள் ஆவார்கள். அவர்களில் சந்திரா மட்டும் இறந்துவிட்டார். சந்திராவிற்கு இளம் வயதிலிருந்தே வலிப்பு நோய் உண்டு என்றால் சரிதான். அதனால் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றாலும் சரிதான். எனக்கு 1980 ல் திருமணம் ஆனது. எனக்கும், கங்கா, அமுதா ஆகியோருக்கும் 1985 க்கு முன்பே திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். திருமணத்தை எனது தந்தையார் செலவில் நடத்தினார் என்றால் சரிதான். திருமணம் ஆனது முதல் நானும் எனது சகோதரிகளும் அவர் அவர் கணவர் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். திருமணமாகாத சகோதரியான சந்திரா மட்டும் என் தாயாருடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். சந்திரா, எனது தாயார் மற்றும் செல்வசேகரன் குடும்பமும் ஒன்றாக வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். 2005 ஆம் வருடம் புதுப்பிக்கப்பட்ட செல்வசேகரன் குடும்ப அட்டையிலும், அவரது தாயாரின் மாரிமுத்து அம்மாள், சகோதரி சந்திரா மற்றும் மனைவி குழந்தைகள் பெயர் உள்ளது என்றால் சரிதான். நானோ எனது சகோதரிகளோ தாவா சொத்தான கதவு எண் 88 ல் வசிப்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் பக்கிரிசாமி 1989 ல் இறந்துவிட்டார். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், சொல்கேள்விதான். எனவே வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தை கிரயம் வாங்குவதற்கு பணம் யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தகப்பனார் தான் பணம் கொடுத்ததாக அவர் என்னிடம் சொல்லியுள்ளார். வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனவே வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்று நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட விவரம்

தெரியுமா என்றால் தெரியாது. எனது தாயார் சொத்தைகிரயம் பெறுவதற்கு முன்பு 28.12.1954 ல் கிரய ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளார் என்றால் எனதுதகப்பனார் வெளிநாட்டில் இருந்ததால் என் தாயார் பெயரில் ஏற்பட்டது. கிரய ஒப்பந்தத்தில் கண்ட தொகையை மாரிமுத்து அம்மாள் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனது தகப்பனார் வெளிநாட்டில் இருந்ததால் எனது தந்தையார் கொடுத்திருக்கலாம் என்று அனுமானத்தில் சொல்கின்றேன். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கோர்ட்டு அறிவிப்பில் கண்ட தகவலை நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். அறிவிப்பில் எனது தாயார் இறந்த ஆண்டான 2013 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தையார் பக்கிரிசாமி எனது தாயார் இறப்பிற்கு 24 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அப்படி உள்ள நிலையில் வா.சா.ஆ.3 ஆவணத்தில் 19.11.2013 ல் தாயார் மாரிமுத்து அம்மாள் இறந்துவிட்டதாகவும், அதன் பிறகு வாரிசு முறையில் பக்கிரிசாமி அடைந்து அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான 1 ஆம் பிரதிவாதியும், மற்றும் என் சகோதரிகள் கங்கா, அமுதா, பாமா மற்றும் மாலா (நான்) ஆகியோர் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1989 க்கு பின்னிட்டு நானும் எனது சகோதரிகளும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்துவருவதை காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது தகப்பனார் எந்த சொத்தை விற்றுவிட்டு அனுபவித்து வந்தார் என்றால் மடவடியார் தெருவில் உள்ள ஒரு வீடாகும். 1 ஆம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்தில் குடியிருந்தார் என்றால் இல்லை. ஒரு மெஸ் இயங்கிவந்தது. மெஸ்ஸை எப்போது வாடகைக்கு விட்டார்கள் என்றால் எனது தாயார் இறந்த மறுவருடம் வாடகைக்கு விட்டார். யார் வாடகைக்கு இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் மெஸ் வாடகைக்கு விடப்பட்டது என்ற விவரத்தை பிராதில் சொல்லாததற்கு காரணம் உண்டா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து எவ்வளவு பொறுமானம் போகும் என்றால் எனக்கு தெரியாது. சொத்தை விற்பனை செய்ததற்கு எத்தனை இனங்களில் நீலம்பாள் பணம் பெற்றுக்கொண்டார் என்று தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாமல் தற்போது வழக்கு சொத்தை எனது தந்தை பினாமியாக தாயார் பெயரில் வாங்கியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டிருப்பதால் தாவா சொத்து

பினாமியாக வாங்கப்பட்டது என நான் கூற தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி இறக்கும் வரை 1 ஆம் பிரதிவாதி வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். எனது சகோதரர் ராஜசேகரன் திருமணம் ஆகாமலே 1985 ஆம் வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது சகோதரி இறந்த கடைசி காரியத்திற்கான செலவு செல்வசேகரன் தான் செய்தார் என்றால் ஆமாம், நாங்களும் செலவு செய்தோம். நான் என் சகோதரி இறக்கும் வரை பணிவிடை செய்ததற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் குடும்பத்தில் சமாதி மேடை பூஜை என்பது உண்டு என்றால் சரிதான். 16.05.2007 ல் எனது சகோதரி சந்திரா இறந்ததற்கான காரியங்களை செல்வசேகரன் தான் செய்ததாக என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கையில் உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரிக்கையின் அசல் பி.வா.சா.ஆ.1 ஆகும். எனது தாயார் 2013 ல் இறந்த போதும் அவருக்குண்டான காரியத்தை 1 ஆம் பிரதிவாதிதான் பத்திரிக்கை அடித்து செய்தார் என்றால் சரிதான். 19.11.2013 தேதியிட்ட மோட்சதீப ஆராதணை பத்திரிக்கை பி.வா.சா.ஆ.2 ஆகும். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். எனது சகோதரி இறப்பு காரியத்திற்குண்டான செலவுகளையும் என் தயாரின் இறப்பிற்குண்டான காரிய செலவுகளையும் 1 ஆம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் மகன்தானே செய்யவேண்டும். உயில் எழுதிய விவரம் எனக்கு பதிலறிவிப்பு கொடுக்கும்வரை தெரியாது. நன்னிலம் தாலுக்கா, நீலக்குடி கிராமத்தில் என் தாயார் மாரிமுத்து அம்மாளுக்கு நஞ்சை நிலங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்துக்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டார்கள். அதற்குண்டான நஷ்ட ஈடு தொகையை என் தாயார் வாங்கினார். தாயார் பெயரிலும் செல்வசேகரன் பெயரிலும் கூட்டாக திருவாரூர் இந்தியன் வங்கியிலும், கமலாம்பிகா கோ ஆப்ரடிவ் வங்கியிலும் கணக்கு இருந்தது என்றால் எனக்கு தெரிந்தவரை தாயார் பெயரில்தான் இருந்தது. அந்த வங்கி கணக்குகளில் இருந்த தொகையை பொறுத்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வங்கியிலிருந்த தொகைகள் என்னவானது என்று கேட்டு விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. எனது தந்தை உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் எனது சகோதரர் கொடுத்த பதிலறிவிப்பில் தெரிந்துக்கொண்டேன். தாவா சொத்து எனது தகப்பனாருடையது என்பதன் அடிப்படையில் பாகம் கேட்கிறேனா அல்லது எனது தாயார் சொத்து என்பதன் அடிப்படையில் பாகம் கேட்கிறேனா என்றால் எனது தகப்பனார் சொத்து

என்ற அடிப்படையில் பாகம் கேட்கிறேன். எனது தகப்பனார் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்ததாக சொல்வதை காட்டும் விதமாக ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இயலாது. பாகம் கோருவதற்கும், எனது கட்சிக்கும் அடிப்படை முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்வதற்கு உண்டான செலவை எனது தாயார் செய்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது தாயாரும், தகப்பனாரும் வேதாரண்யம் பதிவு அலுவலகத்தில் அவர் அவர்களுக்கு உள்ள சொத்துக்கள் பொறுத்து உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணம் எனது தாயார் இறப்பதற்கு நீண்ட வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அவர் நல்ல மனநிலையில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் எனது தாயார் நல்ல மனநிலையில் தன்னிச்சையாக சிந்திக்க கூடிய நிலையில் தான் எழுதிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 உயிலை ஆட்சேபணை செய்ய எனக்கு உரிமையில்லை என்றாலும், அது அமுலுக்கு வந்துவிட்டது என்றாலும் சரியல்ல. நான் எனது தாய், தந்தையார் இறப்பிற்குண்டான வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மாவட்ட ஆட்சியருக்கு பட்டா மாறுதலுக்கு குறித்து ஆட்சேபணை செய்துகொடுத்த தேதி 07.02.2023 என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.2 உயிலின் நகல் பெற்ற தேதி 06.12.2022 என்றால் சரிதான். பெயரை மாற்றக்கூடாதென நான் உடனடியாக நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தை 16.12.2022 ல் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வில்லங்க சான்று பெற்ற பின்னர் 1 ஆம் பிரதிவாதி தனது மகன் பெயருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். 1 ஆம் பிரதிவாதி எழுதிவைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்பது குறித்து நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். அந்த வகையிலும் எனது பிராது பிழையுடையது என்றால் சரியல்ல. உயில் பொறுத்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தாய், தந்தையாருக்கு எழுதப்படிக்க தெரியாததால் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. இந்த விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள எனது தாயாரின் கையெழுத்து இல்லை என்று பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தற்போது வழக்கிற்காக எனது தாயாரும்,

தகப்பனாரும் எழுதிவைத்த உயில் செல்லாது என பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை பயமுறுத்தி பணம் பறிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில கண்ட வாசகப்படி 1 ஆம் பிரதிவாதி அவரது கடமையை செய்துள்ளார் என்றால் சரியல்ல. உயிலின் அடிப்படையிலும் பின்னிட்டு ஏற்பட்ட செட்டில்மெண்ட் அடிப்படையிலும் தாவா சொத்து 2 ஆம் பிரதிவாதிக்கு உரிமையுடையது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எந்தகாலத்திலும் நான் கூட்டு அனுபவத்தில் இல்லாததால் பிரிவு 37 (2) ன் படி முத்திரைக்கட்டணம் செலுத்தியிருப்பது சரியல்ல. எனது தகப்பனார் இறந்த தேதியை வழக்கு மூலத்தில் காட்டியிருப்பது தவறனாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.